TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066942

1. District : மாவட்டம் **கடலூர்** PS: காவல்நிலையம் **ஊ.த.க. பிரிவு** Year: ஆண்டு **2019** FIR No.: மு.த.அ. எண் **4/2019** Date: நாள் **18.03.2019**

2. (i) Act சட்டம்: **குற்றவியல் நடைமுறை சட்டம் 1973** Sections பிரிவுகள்: **102**
(ii) Act சட்டம்: **ஊழல் தடுப்பு சட்டம் 1988,** Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: **ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம், 2018** Sections பிரிவுகள்: **7**
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **01.11.2018 13.00 hrs** Date to : நாள் வரை **01.11.2018 20.30 hrs**
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **02.11.2018** Time : நேரம் **11.00 hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - I** Time : நேரம் **02.11.2018, 12.00 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **கணினி தட்டச்சு**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **வட்டார போக்குவரத்து அலுவலகம், கேப்பர்மலை, கடலூர் சுமார் 5 கி.மீ. தெற்கு**
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -- District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **M.ராஜா** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **N. முருகேசன்**
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **45 வயது** (d) Nationality : நாட்டினம் **இந்தியன்** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் **முதுநிலை வருவாய் ஆய்வாளர்** (g) Address : முகவரி **மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர் மாவட்டம், கடலூர்**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1) V.சக்திவேல், வயது 48, த/பெ, வைரவேல், மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை–1, வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர்.**

**2) K.பவானி, வயது 48, க/பெ, திருநாவுக்கரசு, வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

———

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

கடலூார் மாவட்டம், கடலூாரில் கேப்பர்மலை பகுதியில் இயங்கி வரும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கடந்த 01.11.2018 ம்தேதி கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளரான M.ராஜா என்பவருக்கு கிடைத்த தகவலின்படி அவருக்கு உதவியாக அவரது அழைப்பை ஏற்று காவல் ஆய்வாளராகிய நான் மற்றும் காவலர்களுடன் திடீர் ஆய்வு சோதனை 13.00 மணி முதல் 20.30 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இது சம்மந்தமாக கடந்த 02.11.2018 ம்தேதி M.ராஜா, முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் அவர்களால் 01.11.2018ந்தேதி மேற்கொண்ட தீடீர் ஆய்வு சோதனை சம்மந்தமாக புகார் மனு

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18.03.19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.03.19 — 16.30 மணி.

Name: பெயர் ...தி. [illegible]...
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
[illegible]
கடலூர்.

நடவடிக்கைகோரி நிலையத்தில் அளித்திருந்தார். அதன் விபரம் பின்வருமாறு: நாள்.02.11.2018 அனுப்புநர் M.ராஜா, வயது 45, த/பெ, N.முருகேசன், முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர், பெறுநர் : காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர், அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – வட்டார போக்குவரத்து அலுவலகம், கேப்பர்மலை, கடலூர் – கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ஒப்படைப்பு – புகார் மனு – நடவடிக்கை எடுத்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளரான M.ராஜா ஆகிய நான் நேற்று (01.11.2018) காலை 10.00 மணிக்கு எனது அலுவலகத்தில் இருக்கும்போது எனக்கு கிடைத்த தகவலின்படி கடலூர் மாவட்டம், கடலூர் கேப்பர் மலையில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கடலூரில் உள்ள டிரைவிங் ஸ்கூல் நடத்துபவர்கள் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சம்மந்தமில்லாத புரோக்கர்கள் போன்று செயல்படும் வெளிநபர்கள் நேற்று (01.11.2018) வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சக்திவேல் மற்றும் அலுவலக நேர்முக உதவியாளர் திருமதி.பவானி ஆகியோர்களை தீபாவளி பண்டிகை தொடர்பாக மரியாதை நிமித்தமாக சந்தித்து பணம் கொடுக்க போவதாக கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு நேற்று (01.11.2018) காலை 11.00 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த ஆய்வாளர் திரு.D.சண்முகம் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு மதியம் 13.00 மணிக்கு மேல் சென்றால் அங்கு டிரைவிங் ஸ்கூல் நடத்துபவர்கள் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் சம்மந்தமில்லாத புரோக்கர்களாக செயல்படும் வெளிநபர்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் ஆகியோர்களுக்கு கொடுத்திருந்த பணத்தை ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், ஆய்வாளர் சண்முகம் அவரது அலுவலகத்தில்

இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். உடன் ஆய்வாளர் சண்முகம், தொலைபேசி மூலமாக கடலூர் ஆயுதப்படைக்கு தொடர்புக்கொண்டு இரண்டு பெண் காவலர்களை ஆய்வுக்கு அனுப்ப கேட்டுக்கொண்டார். அதன்படி WPC 168 M.சரளா, WPC 1499 P.கலைச்செல்வி ஆகியோர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திற்கு வந்தனர். பின்னர் நானும், ஆய்வாளர் சண்முகம் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் நேற்று பகல் சுமார் 12.30 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு கடலூர் கேப்பர் மலையில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை கண்காணித்து பின்னர் பகல் சுமார் 13.00 மணிக்கு, கிழக்கு திசை பார்த்து அமைந்து இருக்கும் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். அப்போது என்னுடன் வந்த ஆய்வாளரையும், அவரது காவல் குழுவினரையும் கண்ட சிலர் பயந்துக்கொண்டு அலுவலகத்தை விட்டு ஓட தொடங்கினர். அப்போது ஆய்வாளர் சண்முகம், வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் முகப்பு வாசல் கேட்டை மூடினார். அப்போது என்னுடன் வந்த ஆய்வாளர் சண்முகம், அலுவலகத்தில் இருந்து பயந்து ஓடி வந்தவர்களை, அலுவலகத்தின் முன் ஹாலில் உட்கார வைத்துவிட்டு, பாதுகாப்பிற்கு காவலர்களை நியமித்தார். நானும், ஆய்வாளரும் மற்றும் இதர காவல் குழுவினரும் அலுவலகத்தின் வலதுபுறம் உள்ள படிகட்டு வழியாக மாடிக்கு சென்றோம். முதல் மாடியில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக அறை இருந்தது, அந்த அறையில் கூட்டமாக நின்று கொண்டிருந்தவர்கள், எங்களை கண்டதும், சற்று நகர தொடங்கினர். பின்னர் நான், ஆய்வாளருடன் அந்த அறையில் அமர்ந்திருந்த நபரிடம் என்னையும், ஆய்வாளரையும் அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரை பற்றி விசாரித்த போது தன் பெயர் V.சக்திவேல், வயது 48, த/பெ வைரவேல், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை – I, வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர் என்றும், வீட்டு முகவரி : எண்.20, அக்ஷயா கார்டன், தில்லை நகர், வடகுத்து கிராமம், நெய்வேலி, நிரந்தர முகவரி : எண்.11, பள்ளிகூட வீதி, சின்ன சேமூர் கிராமம், ஈரோடு என அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை, மோட்டார் வாகன ஆய்வாளர் சக்திவேல் அவர்கள் முன்னிலையிலேயே ஆய்வு செய்யவுள்ள விவரத்தை தெரிவித்து, பின்னர் நான், ஆய்வாளர்

சண்முகம், மோட்டார் வாகன ஆய்வாளர் சக்திவேல் மற்றும் காவல் குழுவினருடன் அலுவலக மாடியில் இருந்து கீழே வந்து, அலுவலகத்தின் இடதுபுறம் இருந்த வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் அறையில் இருந்த நபரை விசாரிக்க தனது பெயர் K.பவானி, வயது 48, க/பெ திருநாவுக்கரசு, எண்.29/3, வெங்கடேஸ்வரா நகர், இரண்டாவது குறுக்கு, திருப்பாதிரிப்புலியூர், கடலூர், நிரந்தர முகவரி : எண்.10A(G2), முதல் தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை–26 என தெரிவித்து, தான்தான் வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் என சொன்னார். மேலும் தற்போது கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது என்றும், மேற்படி பணியிடத்தை கூடுதல் பொறுப்பாக சிதம்பரம் வட்டார போக்குவரத்து அலுவலர் R.இளம்முருகன் பொறுப்பு வகித்து வருவதாக கூறினார். அவரிடம் சோதனை விவரத்தை விவரிக்கப்பட்டது. மேற்சொன்ன நேர்முக உதவியாளர் அறையை சோதனையிட அங்கு பணம் எதுவும் இல்லை. அதனை தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளர் சக்திவேல் மற்றும் நேர்முக உதவியாளர் பவானி முன்னிலையில் வட்டார போக்குவரத்து அலுவலக அறைகள் சோதனை செய்யப்பட்டது. அதன்படி நேர்முக உதவியாளர் அறைக்கு முன் வலதுபுறத்தில் இருந்த இரண்டு பெரிய மர அலமாரியில் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் ஆவணங்களுக்கு இடையில், மற்றும் ஆவணங்களுக்கு அடியில், இடுக்குகளில் பணம் இருந்தது. அதை எண்ணிப்பார்க்க (1) 2000 x 12 = 24,000/- (2) 500 x 95 = 47,500/-, (3) 200 x 8 = 1,600/-, (4) 100 x 80 = 8000/- (5) 50 x 15 = 750/- (6) 20 x 7 = 140/-, (7) 10 x 16 = 160/- ஆக மொத்தம் ரூ.82,150/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சக்திவேல் மற்றும் பவாணி ஆகியோர்களிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ.82,150/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். பின்னர் நேர்முக உதவியாளர் அறைக்கு எதிரில் அலுமினிய தகடுகளால் தடுப்பு ஏற்படுத்தி நுழைவுவாயிலுடன் இருந்த, பெரிய ஹால் இருந்தது. அந்த ஹாலின் இடதுபுறத்தில் நீண்ட மர ரேக்குகளில் ஆவணங்கள் அடுக்கப்பட்டிருந்தது. அந்த மர ரேக்குகளில் உள்ள ஆவணங்களை மற்றும் ரேக்குகளை சோதனையிட சிறு சிறு கட்டுகளாக பணம் ஆவணங்களின் அடியில் காணப்பட்டது,

அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க (1) 2000 x 16 = 32,000/- (2) 500 x 80 = 40,000/-, (3) 200 x 15 = 3,000/-, (4) 100 x 70 = 7,000/- (5) 50 x 15 = 750/- (6) 20 x 5 = 100/-, (7) 10 x 15 = 150/- ஆக மொத்தம் ரூ.83,000/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சக்திவேல் மற்றும் பவானி ஆகியோர்களிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ.83,000/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். மேற்படி ஹாலில் வடக்கு பார்த்து Computer, Printer உடன் நாற்காலியில் அமர்ந்து இருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் P.ஆதிலட்சுமி, வயது 26 த/பெ பழனி, வீட்டு முகவரி. 5/586, முருகன் கோவில் தெரு, A.K.குச்சிபாளையம், சின்னகள்ளிப்பட்டு அஞ்சல், விழுப்புரம் என முகவரி சொல்லியும், தான் B-1 Juniour Assistant ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். தான் அரசு பணத்தை வசூல் செய்யும் பணியை செய்வதாகவும் சொன்னார். அவரது டேபிளின் டிராயரில் பணம் இருந்தது. பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.10,854/– இருந்தது. அவரிடம் இப்பணம் குறித்து விவரம் கேட்க, Computerல் இருந்த Daily Cash Statement எடுத்து கொடுத்தார். அதில் மொத்தம் 13 பதிவுகள் சம்மந்தமாக விவரம் இருந்தது, அதன் கூடுதல் தொகை மேற்சொன்ன ரூ.10,854/– உடன் ஒத்து இருந்தது. அப்பணத்தை விசாரணைக்கு பின் அரசு பணம் என்பதால் ஆதிலட்சுமியிடம் ஒப்படைத்தேன். Daily Cash Statement ல் ஆதிலட்சுமியிடம் கையெழுத்து பெற்றேன். மேற்படி ஹாலில் அடுத்து வடக்கு பார்த்து Computer, Printer உடன் நாற்காலியில் அமர்ந்து இருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் P.விக்னேஷ்வரி, வயது 37, க/பெ வேல்முருகன், வீட்டு முகவரி எண்.16, முதல் குறுக்கு, சிவசக்தி நகர், சிதம்பரம் என முகவரி சொல்லியும், தான் A-3 Assistant ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். தான் அரசு பணத்தை வசூல் செய்யும் பணியை செய்வதாகவும் சொன்னார். அவரது டேபிளின் டிராயரில் பணம் இருந்தது. பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.31,484/– இருந்தது. அவரிடம் இப்பணம் குறித்து விவரம் கேட்க, Computerல் இருந்த Daily Cash Statement எடுத்து கொடுத்தார். அதில் மொத்தம் 37 பதிவுகள் சம்மந்தமாக விவரம் இருந்தது, அதன் கூடுதல் தொகை மேற்சொன்ன

ரூ.31,484/– உடன் ஒத்து இருந்தது. அப்பணத்தை விசாரணைக்கு பின் அரசு பணம் என்பதால் விக்னேஷ்வரி வசம் ஒப்படைத்தேன். Daily Cash Statement ல் விக்னேஷ்வரியிடம் கையெழுத்து பெற்றேன். மேற்படி ஹாலில் அடுத்து வடக்கு பார்த்து Computer, Printer உடன் நாற்காலியில் அமர்ந்து இருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் R.ரவிசங்கர், வயது 42, த/பெ சி.கே,ராதாகிருஷ்ணன், வீட்டு முகவரி எண்.37, காமராஜர் நகர், வன்னியர்பாளையம், கடலூர் என முகவரி சொல்லியும், தான் B-3 & B-4 Assistant ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். தான் அரசு பணத்தை வசூல் செய்யும் பணியை செய்வதாகவும் சொன்னார். அவரது டேபிளின் டிராயரில் பணம் இருந்தது. பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.40/– இருந்தது. அவரிடம் இப்பணம் குறித்து விவரம் கேட்க, Computerல் இருந்த Daily Cash Statement எடுத்து கொடுத்தார். அதில் 1 பதிவு விவரம் இருந்தது. அதன் தொகை மேற்சொன்ன ரூ.40/– உடன் ஒத்து இருந்தது. அப்பணத்தை விசாரணைக்கு பின் அரசு பணம் என்பதால் ரவிசங்கர் வசம் ஒப்படைத்தேன். Daily Cash Statement ல் ரவிசங்கரிடம் கையெழுத்து பெற்றேன். மேற்படி ஹாலில் அடுத்து வடக்கு பார்த்து Computer, Printer உடன் நாற்காலியில் அமர்ந்து இருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் G.செண்பகவள்ளி, வயது க/பெ சீனிவாசன், வீட்டு முகவரி எண்.48, மூன் ஷேடோ சேம்பர்ஸ், திருப்பாதிரிப்புலியூர், கடலூர் என முகவரி சொல்லியும், தான் A-2 Assistant ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். தான் அரசு பணத்தை வசூல் செய்யும் பணியை செய்வதாகவும் சொன்னார். அவரது டேபிளின் டிராயரில் பணம் இருந்தது. பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.1,616/– இருந்தது. அவரிடம் இப்பணம் குறித்து விவரம் கேட்க, Computerல் இருந்த Daily Cash Statement எடுத்து கொடுத்தார். அதில் மொத்தம் 8 பதிவுகள் சம்மந்தமாக விவரம் இருந்தது. அதன் கூடுதல் தொகை மேற்சொன்ன ரூ.1,616/– உடன் ஒத்து இருந்தது. அப்பணத்தை விசாரணைக்கு பின் அரசு பணம் என்பதால் செண்பகவள்ளியிடம் ஒப்படைத்தேன். Daily Cash Statement ல் செண்பகவள்ளியிடம் கையெழுத்து பெற்றேன். மேற்படி ஹாலில் அடுத்து வடக்கு பார்த்து Computer, Printer உடன் நாற்காலியில் அமர்ந்து இருந்த நபரை விசாரிக்க தனது பெயர் D.மாலதி, வயது 28, க/பெ தினேஷ், மாரியம்மன் கோவில் தெரு, தட்டாம்பாளையம்,

பண்ருட்டி என முகவரி சொல்லியும், தான் A-4 Junior Assistant ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். தான் அரசு பணத்தை வசூல் செய்யும் பணியை செய்வதாகவும் சொன்னார். அவரது டேபிளின் டிராயரில் பணம் இருந்தது. பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.40,622/– இருந்தது. அவரிடம் இப்பணம் குறித்து விவரம் கேட்க, Computerல் இருந்த Daily Cash Statement எடுத்து கொடுத்தார். அதில் மொத்தம் 37 பதிவுகள் சம்மந்தமாக விவரம் இருந்தது. அதன் கூடுதல் தொகை மேற்சொன்ன ரூ.40,622/– உடன் ஒத்து இருந்தது. அப்பணத்தை விசாரணைக்கு பின் அரசு பணம் என்பதால் மாலதி வசம் ஒப்படைத்தேன். Daily Cash Statement ல் மாலதியிடம் கையெழுத்து பெற்றேன். மேற்சொன்ன A-4 Junior Assistant ன் இருக்கைக்கு பக்கத்தில் இருந்த ஒரு டேபிளின் மேல் இருந்த ஆவணங்களின் கீழ் பணம் இருந்தது, அப்பணத்தை எண்ணிப்பார்க்க, (1)2000x22=44,000/- (2)500x103=51,500/-, (3)200x19=3,800/-, (4)100x117=11,700/- (5)50x33=1,650/- (6)20x17=340/-, (7)10x24=240/- ஆக மொத்தம் ரூ.1,13,230/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சக்திவேல் மற்றும் பவாணி ஆகியோர்களிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ.1,13,230/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். பின்னர் அந்த ஹாலுடன் இணைந்த மேற்கு புறத்தில் இருந்த அறையில் Registration Clerk B-2 அறைக்கு சென்றபோது அங்கு அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் V.ரவிக்குமார், வயது 38, த/பெ வெங்கடேசன், வீட்டு முகவரி எண்.41, வடக்கு தெரு, எறும்பூர் கிராமம் மற்றும் அஞ்சல், புவனகிரி தாலுக்கா தான் B-2 Assistant ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். தான் அரசு பணத்தை வசூல் செய்யும் பணியை செய்வதாகவும் சொன்னார். அவரது டேபிளின் டிராயரில் பணம் மற்றும் வங்கி வரைவோலை இருந்தது. அப்பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.1,60,687/– இருந்தது. அவரிடம் இப்பணம் குறித்து விவரம் கேட்க, Computerல் இருந்த Daily Cash Statement எடுத்து கொடுத்தார். அதில் மொத்தம் 5 பதிவுகள் சம்மந்தமாக விவரம் இருந்தது, மேற்சொன்ன ரூ.1,60,687/– உடன் ஒத்து இருந்தது. அப்பணத்தை விசாரணைக்கு பின் அரசு பணம்

என்பதால் ரவிக்குமார் வசம் ஒப்படைத்தேன். Daily Cash Statement ல் ரவிக்குமாரிடம் கையெழுத்து பெற்றேன். மேற்படி B-2 Assistant க்கு இடதுபுறம் உள்ள சிமெண்ட் சிலாப்புடன் கூடிய செல்ப்பில் ஆவணங்கள் பகுதி பகுதியாக அடுக்கப்பட்டிருந்தது. அந்த ஆவணங்களை சோதனையிட, ஆவணங்களுக்கு இடையில் பணம் காணப்பட்டது. அப்பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, (1) 2000 x 14 = 28,000/- (2) 500 x 90 = 45,000/-, (3) 200 x 10 = 2,000/-, (4) 100 x 80 = 8,000/- (5) 50 x 20 = 1,000/- (6) 20 x 8 = 160/-, (7) 10 x 15 = 150/- ஆக மொத்தம் ரூ.84,310/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சக்திவேல் மற்றும் பவாணி ஆகியோர்களிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ.84,310/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். மேற்படி B-2 Assistant க்கு அருகில் கிழக்கு பார்த்து இருந்த அறையில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் P.நித்தியாவதி, வயது 32, க/பெ தினகரன், வீட்டு முகவரி எண்.97, மாரியம்மன் கோவில் தெரு, பெரிய காரைக்காடு, கடலூர் தான் Accountant ஆக இவ்வலுவலகத்தில் பணிபுரிவதாகவும் சொன்னார். அலுவலகத்தில் கணக்காளர்கள் மூலம் வசூல் செய்யப்படும் பணத்தை அன்றைய தினமே மஞ்சக்குப்பத்தில் உள்ள SBI வங்கியில் கட்டிவிடுவதாக சொன்னார், மேலும் அவரது அறையில் உள்ள இரும்பு பீரோவை சோதனை செய்ய ஆவணங்கள் இருந்தன. பீரோவில் பாதுகாப்பு பெட்டக வசதி இருந்தது. அதனை திறந்து சோதனையிட அதில் பணம் இருந்தது. அப்பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.24,070/– இருந்தது. அவரிடம் இப்பணம் குறித்து விவரம் கேட்க, Welfare tax என தெரிவித்தார், அதற்குரிய cash book ஐ பார்க்க ரூ.24,070/–க்குரிய விவரம் பதிவாகி இருந்தது. அப்பணத்தை விசாரணைக்கு பின் அரசு பணம் என்பதால் நித்தியாவதி வசம் ஒப்படைத்தேன். பின்னர் இவ்வலுவலகத்தின் RTO அலுவலக அறையை சோதனையிட ஆவணங்கள் மட்டும் இருந்தது. பணம் எதுவும் இல்லை. தொடர்ந்து RTO அலுவலக அறைக்கு வலதுபுறத்தில் கிழக்கு பார்த்து இருந்த அறையில் ஒரு நபர் அமர்ந்திருந்தார். அந்நபரிடம் விசாரிக்க தன் பெயர் K.கார்த்திகேயன், வயது 33, த/பெ குமாரசாமி,

33,ராமசாமி தெரு, பண்ருட்டி என்றும், தான் Programmer – ஒப்பந்த பணியாளராக பணி செய்வதாக சொன்னார். அந்த அறையை சோதனை செய்ய பணம் எதுவும் இல்லை. அடுத்ததாக Programmer அறைக்கு எதிர்புறம் உள்ள ஹாலில் மேற்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் K.லதா, வயது 38 க/பெ திருநாவுக்கரசு, வீட்டு முகவரி எண்.21, ஜெகநாம்பிகை நகர், பாதிரிகுப்பம், கடலூர் என முகவரி சொல்லியும், தான் C-2 Assistant ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். தான் அரசு பணத்தை வசூல் செய்யும் பணியை செய்வதாகவும் சொன்னார். அவரது டேபிளின் டிராயரில் பணம் இருந்தது. பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.44,666/– இருந்தது. அவரிடம் இப்பணம் குறித்து விவரம் கேட்க, Computerல் இருந்த Daily Cash Statement எடுத்து கொடுத்தார். அதில் மொத்தம் 43 பதிவுகள் சம்மந்தமாக விவரம் இருந்தது, அதன் கூடுதல் தொகை மேற்சொன்ன ரூ.44,666/– உடன் ஒத்து இருந்தது. அப்பணத்தை விசாரணைக்கு பின் அரசு பணம் என்பதால் லதா வசம் ஒப்படைத்தேன். Daily Cash Statement ல் லதாவிடம் கையெழுத்து பெற்றேன். அடுத்ததாக C-2 Assistant க்கு பின்னால் மேற்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் R.கவிதா, வயது 41 க/பெ குணசேகரன், வீட்டு முகவரி எண்.19, நெசனூர் ரோடு, கீழ்பாதி, நெல்லிக்குப்பம், கடலூர் தாலுக்கா என முகவரி சொல்லியும், தான் C-3 Juniour Assistant ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். தான் அரசு பணத்தை வசூல் செய்யும் பணியை செய்வதாகவும் சொன்னார். அவரது டேபிளில் டிராயரில் பணம் இருந்தது. பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.20,604/– இருந்தது. அவரிடம் இப்பணம் குறித்து விவரம் கேட்க, Computerல் இருந்த Daily Cash Statement எடுத்து கொடுத்தார். அதில் மொத்தம் 20 பதிவுகள் சம்மந்தமாக விவரம் இருந்தது. அதன் கூடுதல் தொகை மேற்சொன்ன ரூ.20,604/– உடன் ஒத்து இருந்தது. அப்பணத்தை விசாரணைக்கு பின் அரசு பணம் என்பதால் கவிதா வசம் ஒப்படைத்தேன். Daily Cash Statement ல் கவிதாவிடம் கையெழுத்து பெற்றேன். அடுத்ததாக C-3 Assistant க்கு பின்னால் மேற்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் V.ரபியா ஜெயவாணி, வயது 38, க/பெ நாகராஜன், வீட்டு முகவரி 4வது தெரு, P.N.பாளையம், மேல்பட்டாம்பாக்கம், நிரந்தர முகவரி எண்.9, புது தெரு, எல்லை கிராமம்,

Scanned by CamScanner

உளுந்தூர்பேட்டை என முகவரி சொல்லியும், தான் C-4 Juniour Assistant ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். தான் அரசு பணத்தை வசூல் செய்யும் பணியை செய்வதாகவும் சொன்னார். அவரது டேபிளின் டிராயரில் பணம் எதுவும் இல்லை. அடுத்ததாக C-4 Juniour Assistant க்கு இருக்கைக்கு அருகில் உள்ள கேபினில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க ‘தனது பெயர் R.காமாட்சி, வயது 32, க/பெ வெங்கடேசன், வீட்டு முகவரி எண்.32/10, முதல் தளம், ராஜப்பன் தெரு, பழைய வண்டிப்பாளையம், கடலூர், நிரந்தர முகவரி எண். 230, மேற்கு தெரு, எருமனூர், விருத்தாசலம் என முகவரி சொல்லியும், தான் தபால் பிரிவு பணி சம்மந்தமாக பணிபுரிவதாகவும் சொன்னார். அவரது அறையை சோதனை செய்ய பணம் எதுவும் இல்லை. சோதனையை தொடர்ந்து, முதல் தளத்தில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறையை சோதனையிட, அறையில் இரண்டு தனித்தனி டேபிள் மற்றும் நாற்காலிகள் இருந்தன. சோதனையின் போது உடன் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் சக்திவேல், ஒரு டேபிள் மற்றும் நாற்காலி தன்னுடையது என்று சொன்னார். அந்த டேபிளை சோதனையிட பணம் இருந்தது. அப்பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, (1) 2000 x 10 = 20,000/- (2) 500 x 80 = 40,000/-, (3) 200 x 12 = 2,400/-, (4) 100 x 70 = 7,000/- (5) 50 x 15 = 750/- (6) 20 x 5 = 100/-, (7) 10 x 6 = 60/- ஆக மொத்தம் ரூ.70,310/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சக்திவேல் மற்றும் பவாணி ஆகியோர்களிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ.70,310/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். அப்போது நேர்முக உதவியாளர் பவானி உடன் இருந்தார். மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு அருகில் வடக்கு பார்த்து இருந்த பதிவு அறையை (Record Room) சோதனை செய்ததில் ஆவணங்கள் இருந்தது. ஆவணங்களை சோதனை செய்ததில் பணம் எதுவும் இல்லை. அதனை தொடர்ந்து பதிவு அறைக்கு (Record Room) எதிரில் தெற்கு பார்த்து இருந்த அறையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தனது பெயர் B.சசிகலா, வயது 28, க/பெ பால்ராஜ், வீட்டு முகவரி எண்.46/52, பிள்ளையார் கோவில் தெரு, வன்னியர்பாளையம், கடலூர் என்றும், தான் Data entry operator ஆக பணிபுரிகிறேன் என தெரிவித்தார். அந்த அறையை சோதனை செய்ததில்

Scanned by CamScanner

ஆவணங்கள் இருந்தது. ஆவணங்களை சோதனை செய்ததில் பணம் எதுவும் இல்லை. பின்னர் Data entry operator இருந்த அறையின் பின்புறத்தில் கிழக்குபுறம் பார்த்து உள்ள அறையில் அமர்ந்திருந்த நபர்களை பற்றி விசாரிக்க 1) S.துரைராஜ், வயது 44, த/பெ சுப்புராயலு, வீட்டு முகவரி எண்.15, நடுத்தெரு, விலங்கல்பட்டு, வானமாதேவி அஞ்சல், கடலூர், 2) N.ஜெயபிரகாஷ், வயது 42, த/பெ நாராயணன், வீட்டு முகவரி எண்.24, சங்கர நாயுடு தெரு, திருப்பாதிரிப்புலியூர், கடலூர் என்றும் தெரிவித்தார்கள். அவர்களிடம் பணி பற்றி விசாரிக்க ஓட்டுனர் உரிமத்திற்கு விண்ணப்பித்த நபர்களை போட்டோ எடுப்பது எங்கள் பணியாகும், நாங்கள் ELCOT மூலம் ஒப்பந்த பணி செய்து வருவதாக தெரிவித்தார்கள். அவ்வறையை சோதனை செய்ய ஆவணங்களை தவிர பணம் எதுவும் இல்லை. மேலும் மேற்சொன்ன அலுவலகத்தில் சோதனையின்போது பெறப்பட்ட Daily Cash Statement ல் சம்மந்தப்பட்ட காசாளர், கணக்காளர், கண்காணிப்பாளர் மற்றும் நேர்முக உதவியாளர் ஆகியோர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது. அவை அனைத்தும் விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்னர் எனது ஆய்வின்போது வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் உள்ளே இருந்த 1)A.அப்துல் ரஷித், ரஷீத் ஓட்டுனர் பயிற்சி பள்ளி, 2)குணசேகரன், ஆசியா ஓட்டுனர் பயிற்சி பள்ளி, 3)பாண்டியன், லாவண்யா ஓட்டுனர் பயிற்சி பள்ளி, 4)சந்தான கண்ணன், S.K. ஓட்டுனர் பயிற்சி பள்ளி. 5)தமிழ்மணி, ஸ்ரீதேவி ஓட்டுனர் பயிற்சி பள்ளி, 6)ஆரோக்கிய செல்வம், மாதா ஓட்டுனர் பயிற்சி பள்ளி, 7)தீலிபன், அண்ணாமலையார் ஓட்டுனர் பயிற்சி பள்ளி, 8)புருஷோத்தமன், அன்னை ஓட்டுனர் பயிற்சி பள்ளி, 9)வினோத், தேவகி ஓட்டுனர் பயிற்சி பள்ளி, 10)ராஜா, பிரகாஷ் ஓட்டுனர் பயிற்சி பள்ளி, 11)லியாகத் அலி, நாகூர் ஆண்டவர் ஓட்டுனர் பயிற்சி பள்ளி, 12)செந்தில், விஷ்ணு ஓட்டுனர் பயிற்சி பள்ளி, 13)பன்னீர்செல்வம், ராஜா ஓட்டுனர் பயிற்சி பள்ளி ஆகியோர் இருந்தனர். இவர்களை நான் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் அவர்களின் கையொப்பமும் பெற்றேன். அதனை தொடர்ந்து அலுவலகத்தில் இருந்த 1)வருகை பதிவேடு – 2018, வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர், 2)அலுவலக ஊழியர் பண கையிருப்பு பதிவேடு 1 முதல் 487 பக்கங்கள் (பயன்படுத்தப்பட்ட பக்கம் 401) – இதில் பக்கம் 401 ல் தேதி 01.11.2018 ல் காணப்பட்ட

Scanned by CamScanner

அலுவலக ஊழியர்களின் அவரவர்களுக்குரிய தொகைகளை இந்த பதிவேட்டில் உள்ளவாறு சரிபார்க்கப்பட்டு, பின்னர் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது, 3)வட்டார போக்குவரத்து அலுவலக ஒப்பந்த பணியாளர்கள் பதிவேடு, 4)வட்டார போக்குவரத்து அலுவலகம் சுற்றறிக்கை எண்.1/2017, நாள்.05.06.2017 தேதியிட்ட வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் இடைத்தரகர்கள் ஆதிக்கம் இல்லாத தூய நிர்வாகம், அறிவுரை வழங்குவது சம்மந்தமான அசல் சுற்றறிக்கை, 5) கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட DRIVING SCHOOL INSTRUCTOR DETAILS கையொப்பமிட்ட நகல் ஆகியவை கைப்பற்றது. மேற்சொன்ன வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் சோதனைக்கு நான் மற்றும் காவல் குழுவினருடன் அலுவலகத்தில் நுழைந்து அங்கிருந்தவர்களை விசாரணைக்காக சுற்றி வளைக்க எத்தனைத்தபோது, அலுவலகத்தினுள் இருந்த சிலர் முட்டி அடித்து கொண்டு, அலுவலகத்தை விட்டு வெளியேற முயற்சித்து, மாடி படியில் இருந்து இறங்கும் போது, பிறதான படியில் இருந்து வெளியேறும் போது உருண்டு பிறண்டும், எங்கள் சுற்றி வளைப்பு நடவடிக்கையை மீறி வெளியேறினார்கள். மேற்கண்ட சோதனையின் போது மொத்தம் ரூ.4,33,000/– கைப்பற்றப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் பகல் 13.00 மணி முதல் இரவு 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. பின்னர் இன்று 02.11.2018 ந்தேதி காலை 11.00 மணிக்கு நேற்று எனது தலைமையிலான திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட ரூ.4,33,000/– மற்றும் மேற்படி திடீர் ஆய்வில் தயார் செய்யப்பட்ட அசல் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றுடன் இன்று கடலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி மேற்படி ஆய்வு தொடர்பான நிகழ்வுகளை புகாராக தயார் செய்து தங்களிடம் இன்று (02.11.2018) கொடுக்கிறேன். எனவே மேற்படி எனது ஆய்வில் கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணியிலிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் சக்திவேல் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் பவானி ஆகியோர்கள், விசாரணையின்போது இருந்த புரோக்கர்கள், ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்கள் மற்றும் பயிற்சி பள்ளி சம்மந்தப்பட்ட இதர நபர்கள் மூலம் பெறப்பட்ட லஞ்சப்பணம் என தெரியவருகிறது. எனவே மேற்படி அரசு அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (கையொப்பம்) (M.ராஜா).

Scanned by CamScanner

மேற்சொன்ன புகார் மனுவை கடந்த 02.11.2018 ம்தேதி பெற்று, ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி புகார் மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யவேண்டியும், உரிய விசாரணை மேற்கொள்ளவும், உரிய அதிகார அமைப்பு பெற்ற அதிகாரியிடம் முன் அனுமதி பெறவேண்டி இயக்குனரகம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு, இயக்குனரகம், சென்னையிலிருந்து கிடைக்கப்பெற்ற குறிப்பாணை எண்.SC.No.39650/2018/TPT/CL, நாள்.27.02.2019 என தேதியிட்ட பார்வை 2ல் கண்ட G.O.(D) No.146, Home (Tr-IIA) Dept., Dated: 08.02.2019 ன்படி உத்திரவிட்டு, துணைக்காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர் அலுவலகத்தில் மேற்சொன்ன உத்தரவை பெற்று அதனடிப்படையில் இன்று 18.03.2019 ந்தேதி சுமார் 14.30 மணிக்கு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர் அலுவலகத்தில் த.சண்முகம், காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய பணியில் இருந்தபோது, கடந்த 02.11.2018 தேதியிட்ட மேற்சொன்ன புகார் மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ள (1)வை.சக்திவேல், த/பெ. வைரவேல், வயது 48, மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-I, வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர், (2) கே.பவாணி, க/பெ.திருநாவுக்ரசு, வயது 48, வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர் ஆகியோர், சட்டபிரிவு 2(C) ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி அரசு பணியாளர் ஆவார்.

எனவே மேற்சொன்ன புகாரின் அடிப்படையில் இன்று 18.03.2019 சுமார் 14.30 மணியளவில் புகாரில் குற்றம்சாட்டப்பட்டுள்ள (1)வை.சக்திவேல், த/பெ, வைரவேல், வயது 48, மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-I, வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர், (2)கே.பவாணி, க.பெ.திருநாவுக்ரசு, வயது 48, வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர் ஆகியோர் மீது சட்டபிரிவு 102 குற்றவியல் நடைமுறை சட்டம், உடன் இணைந்த சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988

Scanned by CamScanner

மற்றும் ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இந்த முதல் தகவல் அறிக்கையுடன் (1)மேற்சொன்ன அசல் புகார் மனு 02.11.2018 என தேதியிட்டது, (2)அசல் திடீர் ஆய்வு மகசர் 01.11.2018 தேதியிட்டது, (3) மேற்சொன்ன திடீர் ஆய்வு சோதனையின்போது வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த புரோக்கர்கள் மற்றும் ஓட்டுனநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்கள் மொத்தம் 13 நபர்களிடமிருந்து மனுதாரரால் 01.11.2018 தேதியில் தனித்தனியே பதிவு செய்யப்பட்ட அசல் வாக்குமூலங்கள், (4)கைப்பற்றுதல் மகசரின்படி கைப்பற்றப்பட்ட ரொக்க பணம் ரூ.4,33,000/– ஐ கருவூலக அலுவலர், மாவட்ட கருவூலக அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர் அலுவலகத்தில் 02.11.2018 ம்தேதி ஒப்படைத்தும், ஒப்படைத்தமைக்கு பெறப்பட்ட ரசீது நகல் ஆகியவைகள் இத்துடன் நீதிமன்ற நடவடிக்கைக்காக வேண்டி தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு வழக்குகள் கடலூர் அலுவலகத்தில் அனுப்பிவைக்கப்படுகிறது. இதர நகல்கள் இயக்குநர், ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்குனரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

18.3.19